# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

Case No : STC No.657/2024 Date: 07.02.2026
Deposition of Witness for : பு.சா.1
Name : பச்சமுத்து

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி :-**

1) நான் எனது புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும் காசோலை திருப்பப்பட்ட விவரத்தை எதிரிக்கு நான் அலைபேசியின் வாயிலாக தெரிவித்தபோது அவர் காசோலையை மீண்டும் ஒருமுறை வசூலுக்கு தாக்கல் செய்யுமாறு அலைபேசியில் கூறினார் என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்சொன்ன விவரத்தை நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

2) கடந்த 10-05-2024ம் தேதிமுதல் 12-08-2024ம் தேதிவரை எதிரி பெங்களுரில் உள்ள V-Care மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில், எதிரியின் அலைபேசி Switch off செய்யப்பட்டிருந்தது என்றும், நான் அவருடன் அலைபேசியில் பேசியதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. இரண்டாவதுமுறை காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்து வசூலாகமல் திரும்பிய விவரத்தை எதிரியிடம் அலைபேசி மூலம் தொடர்பு கொள்ள முயற்சித்தபோது எதிரியின் அலைபேசி அணைத்து வைக்கப்பட்டிருந்தது

என்றுதான் நான் எனது புகாரிலும், பிரமாண பத்திரிக்கையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

3) எதிரியிடம் நான் அலைபேசியில் பேசினேன் என்று சொல்வது வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆர்.கே.எம்.மாதேஸ், என்பவர் திருசெங்கோடு செல்லும் சாலையில் உள்ள சங்ககிரி ஆர்.எஸ்-ல் கனரா வங்கி அருகே தான் ஆர்.கே.எம் என்ற பெயரில்மெடிக்கல் வைத்துள்ளார் என்றால் சரிதான். ஆர்.கே.எம் மெடிக்கல் ஆரம்பித்து எத்தனை வருடங்கள் இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சுமார் 1 வருடம் 06 மாதத்திற்கு முன்பு தான் மேற்படி மெடிக்கல் ஆரம்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

4) ஆர்.கே.எம் மெடிக்கல்ஸ் வைத்து தான் எதிரி என்னிடம் பணம் கேட்டார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆர்.கே.எம் மெடிக்கல்லில் எந்த தேதியில், எத்தனை மணிக்கு என்னிடம் பணம் கேட்டார் என்றால் தேதி ஞாபகமில்லை, மதியம் சுமார் 02.00 மணி இருக்கும். நான் எத்தனை முறை ஆர்.கே.எம் மெடிக்கல்ஸ்-க்கு சென்றிருப்பேன் என்றால் 10-15 முறை சென்றிருப்பேன். ஆர்.கே.எம் மெடிக்கல்ஸ்-ல் சிசிடிவி கேமரா உள்ளது என்றால் சரிதான்.

5) நான் எதிரிக்கு பணம் கொடுத்த தேதியில் இருந்து எத்தனை நாட்களுக்கு முன்னர் எதிரி என்னிடம் பணம் கேட்டார் என்றால் 15 நாட்களுக்கு முன்பு கேட்டார். 15 நாட்களுக்கு முன்பு எதிரி என்னிடம் கடன் கேட்டார் என்ற விவரத்தை நான் எனது வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆர்.கே.எம் மெடிக்கல்ஸ் உரிமையாளர் மகேஷ்-ஐ விசாரிக்க எனது ஆட்சேபணை இல்லை

என்றால் சரிதான். ஆர்.கே.எம் மெடிக்கல்ஸ்-ல் சிசிடிவி பதிவுகளை சமர்ப்பித்தால் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான்.

6) ஆர்.கே.எம் மெடிக்கல்ஸ்-ல் உள்ள சிசிடிவி பதிவுகளை பெற்று என்னால் தாக்கல் செய்ய இயலுமா என்றால் உரிமையாளர் கொடுத்தால் நான் தாக்கல் செய்கிறேன். எதிரிக்கு கடன் கொடுத்தபோது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் யாரும் இல்லை, நானும், எதிரியும் தான் இருந்தோம். ஆர்.கே.எம் மெடிக்கல்ஸ்-ல் வைத்து எதிரி என்னிடம் கடன் கேட்டபோது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் நிறைய நபர்கள் இருந்தார்கள், குறிப்பிட்டு சொல்ல இயலாது, ஆர்.கே.எம். மெடிக்கல் உரிமையாளர் மாதேஷ் இருந்தார். வழக்கு காசோலையில் உள்ள அனைத்து விவரங்களையும் எதிரி பூர்த்தி செய்து தான் கொண்டு வந்தார் என்றால் சரிதான்.

7) நான் எவ்வளவு தொகை கடன் தருவேன் என்று தெரியாமலேயே எதிரி காசோலையை பூர்த்தி செய்து கொண்டு வந்தார் என்று சொல்வது நம்பும்படி இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு காசோலைக்கு முந்தைய காசோலை 000484, பிந்தைய காசோலை 000486 ஆகிய காசோலைகள் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டு வசூலாகியுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி என்னிடம் ரூ.1 வட்டி வீதத்தில் கடன் கேட்டார் என்று சொல்லும்போது வழக்கை நான் வட்டி கேட்டு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

8) எதிரி வட்டி தொகையை கொடுத்தாரா அல்லது இல்லையா என்று நான் வழக்கில் குறிப்பிடாததற்கு குறிப்பிட்ட காரணம் உள்ளதா என்றால் இல்லை. இரண்டாவதுமுறை காசோலையை வசூலுக்கு தாக்கல்செய்து திருப்பப்பட்டு எந்த

தேதியில் எதிரியை அழைக்க முற்பட்டேன் என்றால் தேதி ஞாபகமில்லை. ஆர்.கே.எம் மெடிக்கல்ஸ்-ல் உரிமையாளர் மாதேஸ், என்பவர் அவரது மனைவி சத்யா, என்பவர் மூலம் 2024 ம் தேதி, ஜனவரி மாதம் சேலம் மாண்புமிகு முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது குடும்பத்தினர் மீது உரிமையியல் வழக்கு தாக்கல் செய்து அது OS NO.34/2024 என்ற எண்ணாக நிலுவையில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

9) ஆர்.கே.எம் மெடிக்கல்ஸ்-ல் உரிமையாளர் மாதேஸ், என்பவர் அவரது மனைவி சத்யா, என்பவர் மூலம் 2024 ம் தேதி, ஜனவரி மாதம் எதிரிமீது அவரது குடும்ப உறுப்பினர்கள் மீதும் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்த நிலையில், அந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நவம்பர் 2023 ம் வருடம் எதிரி என்னிடம் கடன் கேட்டார் என்று சொல்வது நம்பும்படி இல்லை என்றால் சரியல்ல.

10) எதிரியின் தந்தை கந்தசாமி, என்பவர் 2022 ம் வருடம் மாதேஸ் என்பவரிடம் ரூ.2,00,000/-ம் தொகையை கடன் பெற்றார் என்றும், 2022 ம் வருடத்திலேயே கந்தசாமி இறந்துவிட்டார் என்றும், மேற்படி கடன் தொகையை எதிரியிடம் மாதேஸ், உடனடியாக திருப்பி செலுத்த வேண்டி கேட்டுக்கொண்டதால் எதிரியால் உடனடியாக ரூ.2,00,000/-ம் கடன் தொகையை செலுத்த இயலாததால் வழகக்கு காசோலை உள்பட, காசோலைகள் மற்றும் புரோநோட்டுகள் ஆகியவற்றை மாதேஷ்-டம் கொடுத்தார் என்றும், அதன்பின்னிட்டு மாதேஷ்-க்கும் எதிரிக்கும் கொடுக்கல்/வாங்கல் பிரச்சனை இருந்ததால் இருவருக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றும், அதனால் மாதேஷ், என்னை பயன்படுத்தி துர்லாபம் அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் என்மூலம் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

11) எதிரிக்கு இந்நீதிமன்றத்திற்கு வரும்வரை என்னை யார் என்றே தெரியாது என்றால் சரியல்ல. எதிரி இந்த வழக்கிற்கு பின்னிட்டு என்னை வந்து பார்க்க எனது ஊருக்கு வந்து பார்க்கவந்தபோது எதிரியை யார் என்றே தெரியாது என்று எதிரியிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, எதிரி என்னை எங்களது பகுதிக்கு வந்து வழக்கு நிலுவையில் இருந்தபோது பார்க்கவில்லை. எதிரி என்னிடம் கடன் பெறவும் இல்லை என்றும், காசோலையும் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

Sd/-Pachamuthu

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.